முதன்மை சார்பு நீதிமன்றம் மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்

E.P.150-2012 in Laop.No.115-996

இன்று( 09/01/2023 ) 1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் (1)ன் படி திரு.S. விஜயகுமார், M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிபதி அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சி PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | R. ஜெயபாலன் | மதம் | |
| த/பெ | ராமானுஜம் | தொழில் | |
| ஊர் | கீழ்பெரும்பாக்கம் விழுப்புரம் | | |
| மாவட்டம் | | வயது | 67 |

முதல் விசாரணை

நான் எழுத்து பூர்வமான முதல் விசாரணை சாட்சி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். அதிலுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். நான் கூறித்தான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தயார் செய்யப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் எனது கணக்கீட்டு குறிப்பாணையை 06/01/2023 அன்று தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | 06/01/2023 | எனது கணக்கீட்டு குறிப்பாணை அசல் | மசாஆ.1 |

குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் 50,568.80 சதுரடி என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்றாலும் அதன் உண்மையான விஸ்தீரணம் 50,591 சதுரடி என்று சொன்னால் சரிதான். முதலில் அவார்டு மூலம் 1994ல் வழங்கப்பட்ட நிவாரண தொகை ஒரு சதுரடிக்கு ரூ.7.35/- காசு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதன் படி ரூ.6,16,624/- வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் பிறகு சார்பு நீதிமன்ற தீர்ப்பின் படி ஒரு சதுரடிக்கு 12.10/- ரூபாய் என்று நிர்ணயிக்கப்படடு தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன் படி உங்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ.10,77,042/- என்றாலும் இதில் ரூ.1,09,319/- வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டின் வழக்கின்படி ஒரு சதுரடிக்கு 17/-ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டு அந்த வித்தியாச தொகை ரூ.13,98,861/- வழங்கப்பட்டுள்ளது என்றாலும இதில் வருமான பிடித்தம் ரூ.1,44,083/- என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உங்களுக்கு ரூ.3,77,915.27/-
அதிகமாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

x

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் இடப்பட்டது.

**ஒப்பம்/எஸ்.விஜயகுமார்**
**முதன்மை சார்பு நீதிபதி மற்றும் முதன்மை உதவி அமர்வு நீதிபதி, விழுப்புரம்**